ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/32 - 2021 ඔක්තෝබර් මස 15 වැනි සිකුරාදා - 2021.10.15

*2249/32 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 5/2021*

**2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம்**

*2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5 (3) (ஆ) மற்றும் 30 (3) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின்கீழ் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

**உதய கம்மன்பில,**
*வலுசக்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, ஒற்றோபர் 14.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் (நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியின் குறைந்தபட்ச தகைமைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சட்டத்தின் 5 (3) (ஆ) என்னும் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் குறைந்தபட்ச தகைமைகள் பின்வருமாறிருத்தல் வேண்டும் :-

(அ) ஆகக்குறைந்தது பன்னிரண்டு ஆண்டுகால அனுபவத்தைக் கொண்ட இலங்கை உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவர்;

(ஆ) பெற்றோலிய அகழ்வு முறைகள் என்னும் துறையில் ஆகக்குறைந்தது பன்னிரண்டு வருடகால செயல்முறை அனுபவத்தைக்கொண்ட பௌதீக புவியியலாளர் அல்லது இரசாயன புவியியலாளர் அல்லது பெற்றோலிய புவியியலாளர் ஒருவர்;

1 A - G 35109 - 25 (2021/10)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) ஆகக்குறைந்தது பன்னிரண்டு ஆண்டுகால நிறுவன ரீதியான அனுபவத்தைக்கொண்ட தராதரம் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு, கருத்திட்ட நிதியியல், நிதிசார் முகாமைத்துவம் அல்லது கணக்கியல் என்பவற்றில் உயர்தொழிலர் ஒருவர் அல்லது பட்டயம்பெற்ற நிதிசார் ஆய்வாளர் ஒருவர்;

(ஈ) பெற்றோலியக் கைத்தொழிலில் ஆகக்குறைந்தது பன்னிரண்டு ஆண்டுகால அனுபவத்தைக்கொண்ட பொறியியலாளர் ஒருவர்;

(உ) கூட்டு நிறுவன துறையில் அதியுயர் தடப்பதிவொன்றைக் கொண்ட சிரேஷ்ட கூட்டிணைப்பு தலைவர் ஒருவர்; அத்துடன்

(ஊ) ஆகக்குறைந்தது பன்னிரண்டு ஆண்டுகால உயர்தொழில் அனுபவத்தைக்கொண்ட சுயாதீனமான ஆராய்ச்சி மற்றும் கொள்கைப் பின்னணியிலிருந்து பொறியியலாளர் ஒருவர்.

3. சட்டத்தின் 30 (1) ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியின் குறைந்தபட்ச தகைமைகளும் அனுபவமும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) ஆனால் பெற்றோலிய புவியியல், அகழ்வாராய்ச்சி பௌதீக புவியியல், பெற்றோலிய பொறியியல், நீர்சேமிப்புப் பொறியியல், வெடிப்பு மற்றும் உற்பத்திப் பொறியியல் அல்லது பெற்றோலிய பொருளியல் என்பவற்றுக்கு மட்டுப்படாது ஆனால் விசேடமாக எண்ணெய் மற்றும் வாயுமீதான துறைகளில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பௌதீக விஞ்ஞானம் அல்லது பொறியியற் பட்டம்;

(ஆ) கரைகடந்த தொழிற்பாடுகள் துறையில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டுகால அனுபவம் உள்ளடங்கலாக பெற்றோலிய அகழ்வு, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி செயற்பாடுகள் துறையில் ஆகக்குறைந்தது பதினைந்து ஆண்டுகால அனுபவம்;

(இ) நிர்வாகம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவத் துறையில் சிரேஷ்ட மட்டத்தில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகால அனுபவம்;

4. இவ்வொழுங்குவிதிகளில் :-

''சட்டம்'' என்பது, 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம் எனப் பொருள்படும்.

10 - 449

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.